**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க-வேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பணியகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கம்பெனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு

அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பணியகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல்,முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான " சிறப்பாக திட்டமிடப்பட்ட' ' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பணியகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

## 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் - 09 நிதி செயற்திறன் சான்றிதழ் நியமத்தின் 5.2.1பந்தி பிரகாரம் நிலையான வைப்புகளை பின்னர் மதிப்பிடுகையில் (ளுரடிளநஙரநவெ ஆநயளரசநஅநவெ)அதாவது அறிக்யையிடல் திகதியில் கடன்தீர்ப்பு பெறுமதிக்கு அல்லது நியாயமான பெறுமதி மீது அளவையிடல் மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், செலவுக்கு மதிப்-பிடப்பட்ட நிலையான சொத்துக்களின் வைப்பு பெறுமதி இறுதி கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | 2020, இலங்கை இறுதி கணக்குகளை தயாரிக்கையில் உரிய நியமத்திற்கமைவாக தேவையான செவ்வையாக்குதல்களை மேற்கொள்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமைவாக நிதி கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) மேற்படி நியமத்தின் பந்தி இலக்கம் 5.4.2 பிரகாரம் கடன் தீர்ப்பு பெறுமதி பேணிச் செல்லப்படுகின்ற நிதி சொத்துக்களின் பொருட்டு அதாவது, திறைசேரி முறிகள் தொடர்பில் கணக்-காய்விடம் சமர்ப்பிக்கப்பட்ட அட்ட-வணைகளின் படி பயனுள்ள வட்டி வீதத்தின் கீழ் கணக்கிடப்பட்ட ரூபா. 215,068,099 ஆன வட்டி, வருமா-னமாக அடையாளம் காணப்படுதல் வேண்டுமாயினும், பெயரளவிலான வட்டி விகிதாசாரத்தின் கீழ் கணக்-கிடப்பட்ட ரூபா.194,238,294 ஆன வட்டி தொகை, வட்டி வருமானமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுகளில் பயனுள்ள வட்டி விகிதாசாரம் பிரகாரம், வட்டி வருமானம் குறிப்பிட-ப்படவில்லை என்பதுடன், அது ரூபா 215,068,099 ஆக காண்பிக்கப்படுதல் மேற்கொ-ள்ள வேண்டியிருந்தது. ஆதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் ஏற்புடைய செவ்வைப்படுத்தல் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) பணியகத்தால் மீளாய்விற்கான ஆண் டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா.14,475,000ஐ புலனாகாத சொத்-துக்களில் தற்காலிக வேறுபாட்டை பிற்போடப்பட்ட வரி கணக்கிடுவதற்கு ஏற்புடையதாக கொள்ளாமையும், இலங்கை கணக்கீட்டு தரநியமம் 12 இல் 47 ஆவது பந்திக்கு முரணாக நிதி ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட வரி விகிதாசார-மான 28மூ இற்குப் பதிலாக 24மூ என்ற வரி விகிதாசாரத்தை ஏற்புடை-யதாக கொள்ளுதல், ஆண்டு | பணியகத்தால் ஆண்டு இறுதியில் எல்லா வருமானங்-களையும் கணக்கு வைக்கப்ப-ட்டதன் பின்னர், வரி கொடுப்பனவுகளுடன் ஒப்பிட-ப்படுவதுடன், அதற்காக கவனிக்கத்தக்க அளவிலான காலம் எடுக்கின்றதுஇதன்போது வேறுபாடு இருப்பின் அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் மீண்டும் கொடுப்பனவுகளை மேற்கொண்டுதிருத்தம் செய்த அறிக்கை உள்நாட்டு | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்பட்டு, அதன்படி கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| இறுதியில் கணக்கிடப்பட்ட பிற்போட-ப்பட்ட வரி பொறுப்பு மற்றும் நிதி ஆண்டின் மொத்த பிற்போடப்பட்ட வரி பொறுப்பின் வேறுபாட்டை வருமான கூற்றுக்கு அடையாளம் காணமையும் காரணமாக பிற்போட-ப்பட்ட வரி வருமானம் ரூபா.75,807,236ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்-டிருந்தது. | இறைவரி திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்படுகிறது. உரிய சீராக்கல் குறிப்புகளை 2020 ஆம் ஆண்டின் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சொத்துக்களின்பெறுமதி ரூபா. 120,586,903 ஆன 120 உருப்படி-களுக்கு ஏற்புடையதாக, மீளாய்-விற்கான ஆண்டில் தேய்மானம் கணக்கிடப்படாமை மற்றும் ஆண்டில் கொள்வனவு செய்த 92 சொத்து உருப்படிகளின் தேய்மானம் சரியாக மேற்கொள்ளாமை காரண-மாக ஆண்டில் தேய்மானப் பெறுமதி ரூபா. 5,301,080 ஐ குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் இலாபம் மற்றும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்த அளவில் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த தவறினை 2020 இறுதி கணக்குகளை தயாரி-க்கையில் செவ்வையாக்-குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | சொத்துக்கள் தொடர்பில் தேய்மானம் கணக்கி-டுகையில் செவ்வையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)கொரியாவிற்கு புலம்பெயர்கின்றதொழில்படையினரிட மிருந்து விமான டிக்கெட்டுகளை கொள்-வனவு செய்வதற்காக 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் அறவிடப்பட்ட மொத்தம் ரூபா3,206,875 ஐ சம்பந்தப்பட்ட பணியின் பொருட்டு செலவிடப்பட்டிருக்கையில் நிதிக் கூற்றுகளில் செலுத்தப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தகவல்களை மேலும் பரிசோதனை செய்து 2020 ஆம் ஆண்டில் தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு குறித்துக்கொண்டேன். | இந்த கணக்கீட்டு குறைப்-பாடுகளை செவ்வையா-க்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ)மீளாய்விற்கான ஆண்டுக்கு செலுத்-தப்பட வேண்டிய பொருளாதார சேவை கட்டணங்கள் ரூபா. 4,148,432 ஐ கணக்கு வைக்கப்படவில்லை. | இறுதி கணக்குகளை தயாரிக்கையில் இதனை மீளாய்விற்கான ஆண்டின் கீழ் குறிப்பு வைக்கப்பட-வில்லை 2020 ஆம் ஆண்டில் செவ்வையாக்-குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இந்த கணக்கீட்டு குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |
| (ஈ) நிதிக் கூற்றுகளில் குறிப்பு இலக்கம் 15 இல் காட்டப்பட்டுள்ள வருமான வரி பொறுப்பு கணக்கிடுகையில், குவேட் நட்டஈட்டு முதலீடு வருமானத்திற்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற வேண்டிய பிடிபணம் தொடர்பான வரி ரூபா. 15,312,517 ஐ பதிலீடு செய்யாமை காரணமாக, செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் முன்னரான கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டிய சொத்துக்கள் குறித்த அளவில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட சீராக்கல் குறிப்புகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | எதிர் வரும் ஆண்டில் வருமான வரி பொறுப்பு கணக்கிடுகையில் ஏற்பட்டுள்ள தவறுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (உ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் அட்டுறு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பெறுமதி ரூபா. 9,614,771 ஆயினும், நிதிக் கூற்றுகளில் அது ரூபா. 8,271,428 ஆக காண்பிக்கப்-பட்டிருந்தமையால் அட்டுறு வரி செலவினமாக ரூபா. 1,343,343 ஐ குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட சீராக்கல் குறிப்புகள் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றேன். | நிகழ்ந்துள்ள கணக்கீட்டு குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொ-ள்ளுதல் வேண்டும். |
| (ஊ) நிரல் வரிசை அமைச்சின் அலுவ-லர்களது வெளிநாட்டு பிரயாண-ங்களின் பொருட்டு பணியகத்தால் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,185,480 ஆன தொகை கிடைக்கப்பெற வேண்டிய செலவி-னமாக குறிப்பிடப்படாது வியாபார-ங்களின் மேம்பாட்டு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையால் ஆண்டில் இலாபம் அந்த அளவில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட செலவின-ங்களை மேற்கொள்வதற்காக பணியகத்தின் நிதியம் பயன்படுத்த வேண்டுமென வழங்கியுள்ள ஆலோசனை-களுக்கமைவாக, பணியக-த்தின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | அமைச்சு அலுவலர்-களது வெளிநாட்டு பிரயாணங்களுக்கு தேவையான ஒதுக்கீடு-களை வருடாந்த வரவு செலவு மூலம் ஒதுக்க-ப்பட்டுள்ளதால் இந்த செலவினம் பணியத்தின் செலவினமாக இருத்தலாகாது. |
| (எ) 2016/2017 ஆண்டுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட வருமான வரி பெறுமதி ரூபா.174,431,987 ஆயினும், செலுத்தப்பட வேண்டிய | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன், வரு-மான வரி மதிப்பீடு தொடர்-பாக நீண்டதாக கலந்துரை-யாடப்பட்டுள்ளதுடன், முழு-மொத்த செலுத்தப்பட | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது சரியான பெறுமதிகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | |
|---|---|
| வருமான வரியாக ரூபா.138,479,953 ஐ மட்டும் கணக்கு வைக்கப்பட்டதால் ரூபா.35,952,034 ஆல் வருமான வரிக்கான ஒதுக்கீடு குறைவாகவும் பிடிபண இலாபம் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேண்டிய வரி பொறுப்பு வழங்கிய பின்னர் நிதிக் கூற்றுகளில் ஏற்புடைய ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கின்றேன். | வேண்டும். |

## 1.5.4 கணக்காய்விற்கு எழுத்திலான சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பணியகத்தால் வேலைவாய்ப்புகளின் பொருட்டு வெளிநாடு செல்கின்ற தொழில்படையினறுக்கு விமான டிக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாக, 2018 ஆம் ஆண்டு தொடக்கம்கிடைக்கப்பெற வேண்டிய பணமாக காட்டப்பட்டிருந்த பணத் தொகைக்கு ஏற்புடையதான தகவல்கள் | 1,702,912 | ஆதார கடித ஆவணங்கள் மற்றும் விபரமான அட்டவணைகள் | தகவல்களை மேலும் பரிசோதனை செய்து சமர்ப்பிக்கப்படும். | கிடைக்கப்பெற வேண்டிய பணத் தொகையாக காட்டப்பட்டுள்ள இந்த பெறுமதிக்கு ஏற்புடையதான ஆதாரங்கள், கடித ஆவணங்கள் கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்.

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வெளிநாட்டு பிரயாணங்களின் பொருட்டு பங்குபற்றிய அலுவலர்களுக்காக மீளாய்விற்கான ஆண்டில் செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 1,185,480 ஆன தொகை வியாபார மேம்பாட்டு செலவினமாக கணக்கு வைக்கப்பட்டமையால், ஆண்டின் செலவினம் அந்த அளவில் அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோன்று அந்த பணத் தொகை அமைச்சு மூலம் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உரிய செலவினங்களை மேற்கொள்வதற்காக பணியகத்தின் நிதியை பயன்படுத்த வேண்டுமென வழங்கியுள்ள அலோசனைகள் பிரகாரம், பணியகத்தின் செலவினமாக கணக்கிடப்பட்டுள்ளது. | உரிய பணம் நிரல் வரிசை அமைச்சிடமிருந்து மீளளிப்புச் செய்வறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய தொகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வேலைவாய்ப்புகளின் பொருட்டு வெளிநாடு செல்கின்ற தொழிற்படையிடமிருந்து பல்வேறு காரணங்களால்பிடிபணமாக வைத்துக் கொண்டுள்ள, மீண்டும் செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 517,702,375ம், புலம்பெயர் தொழிற்படையினரின் காப்புறுதி நட்டஈடாக கிடைக்கப்பெற்றுள்ள ரூபா.32,073,228ம், மற்றும் வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிடம் சீராக்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா 327,321,606 ம், உரிய உரிமையாளர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது நீண்ட காலமாக பணியகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | சரியான அட்டவணைகளுடன் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பித்த தரப்புகளிடம் கொடுப்பனவுகளை மேற்கொள்வதுடன், ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் வேறு குறைப்பாடுகள் காரணமாக, இது வரை கவனிக்கத்தக்க அளவிலான விண்ணப்பங்கள் நிதிப் பிரவிடம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. உரிய கோரிக்கைகள் முன் வைத்தவுடன் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காப்புறுதி பொருட்டு பதிவு செய்கையில், நட்டஈடு மீளளிப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக மற்றும் நட்டஈடு விண்ணப்பிக்கும் முறை தொடர்பாக உரிய அறிவுறுத்தல் மேற்கொள்ள வேண்டுமாயினும்,தற்போது செலுத்தப்படாத காப்புறுதி நட்டஈட்டு தொகை அடங்கலாக செலு-த்தப்பட வேண்டிய பணத் தொகையை துரிதமாக செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டம் | | | |
| i. 46 பிரிவு | தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தின் கொடுக்கல்வாங்கல் பொருட்டு பிரிதாக வங்கி கணக்கு பேணிச் செல்லப்படவில்லை. | தொழிலாளர் நலனோம்பல் நிதியம் பொருட்டு இலங்கை வங்கி-யில் நடைமுறை கணக்கு பேணிச் செல்லப்படுகிறது. | பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கு மூலம் மேற்கொண்டுள்ள கொடுக்-கல் வாங்கல் மற்றும் நிதிக் கூற்றுகள் பிரகாரம் அந்தக் கணக்கில் கொடுக்கல் வாங்கல் என்பவற்று-க்கிடையில் கவனிக்கத்தக்க அளவிலான ஏற்றத்தாழ்வு அவதானிக்கப்பட்டது. ஆகையால் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒதுக்கீடு-களின் பிரகாரம் பிரிதாக வங்கி கணக்கு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. 42(2) பிரிவு | இலங்கைக்கு வெளியே சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நல-னோம்பலை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்க-ப்பட்டிருந்த தொழிலாளர் நலனோம்பல் நிதியத்தின் பணத்தை உபயோக-ப்படுத்தி அதன் நோக்க-ங்களுக்கும் குறிக்கோள்-களுக்கும் நேரடி தொடர்பு இல்லாத பணியகத்தின் பணியாற்தொகுதியினரின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பொதுப் பணிகளுக்காக செலவிட-ப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்றுகளின படி மீளாய்-விற்கான ஆண்டில் அதற்-காக மொத்தம் ரூபா1,050,341,472 ஐ செலவிடப்பட்டிருந்தது. அது நலனோம்பல் நிதியத்தின் முழுமொத்த செலவினத்தில் 72 ஆன சதவீதமாகும். | 1998 யூன் 03 ஆந் திகதிய1998/783/32/017ஆம் இலக்க அமைச்சரவை கட்டளை மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மூலம் வெளியிடப்பட்டயுஊஊமுருவே ஐபேநுஊஜசு மூே 01 முகு1999இன் பிரகாரம் ஏற்-புடைய செலவி-னங்களை தொழிலா-ளர் நலனோம்பல் நிதியத்தில் மேற்-கொள்ளப்பட்டுள்ளது. | தொழிலாளர் நலனோம்பல் நிதியம் ஆரம்பிக்கும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவ-ற்றை நிறைவேற்றிக்-கொள்வதற்காக அந்த நிதியம் உபயோக-ப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) 2006திசெம்பர்22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | | | |
| i. 4.2 (ஈ) பந்தி | தொழிலாளர் நலனோ-ம்பல் நிதியத்திற்கு ஏற்புடையதாக மீளாய்விற்-கான ஆண்டில் நிதிசார் தகவல்கள் தொடர்பான அறிக்கைகளை அரச நிதி பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், வெளிநாட்டு தூதரகங்களிடமிருந்து நிதியத்திடம் கிடைக்கப்-பெறும் வருமானம் தொட-ர்பில் அரச கணக்கு திணைக்களம் மற்றும் | இந்த சுற்றறிக்கை 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிரு-ப்பினும் இது வரை அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோச-னைகள் பிரகாரம் நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றின் ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை | | |
| ii. **4.3** பந்தி | தொழிலாளர் நலனோம்பல் நிதியம் தொடர்பில் சுற்றுநிருபம் பிரகாரம், தகவல்களை உள்ளடக்கி செயலாற்றுகை அறிக்கை,அரச நிதி பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன், கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சுற்றறிக்கை 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருப்பினும் இது வரை அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) 2015யூலை 10 ஆந் திகதிய 2015/02 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 2012 ஆண்டு தொடக்கம் அகற்றப்பட வேண்டுமென பணியகத்தால் தீர்மானிக்கப்பட்டிருந்த செலவினம் ரூபா. 14,176,542ஆன 09 வாகனங்கள் சுற்றறிக்கை பிரகாரம் அகற்றப்படவில்லை என்பதுடன், வாகனங்களின் அகற்றல் நடவடிக்கைகளை சுற்றுநிருபத்தின் ஆலோசனைகள் பிரகாரம் வருடாந்தம் மேற்கொள்ளப்படவில்லை. | வாகன அகற்றல் செயற்பாடு மேற்-கொள்ளப்படுகிறது. | சுற்றுநிருபத்தின் ஆலோசனைகள் பிரகாரம், வாகனங்களை அகற்றப்படாது, பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்படுதல் காரணமாக பெறுமதி குறைவடைவதால், பணியகத்திற்கு நட்டம் ஏற்படாதிருக்கும் வகையில் செயலாற்றுவதற்கு முகாமைத்துவம் விசேட கவனம் செலுத்தல் வேண்டும். |
| (உ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1பந்தி | பணியகத்திற்குரிய வாகனங்கள் 22 ஐ கொள்வனவு செய்த திகதி தொடக்கம் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை . | எரிபொருள் செல-வழிவு தொடர்பாக பரிசோதனை நடவடிக்-கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், கொ-ரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டவாறு எரிபொருள் பரிசோதனை மேற்-கொள்ள முடிய-வில்லை. | பணியகத்தால் எல்லா வாகனங்களுக்கும் ஏற்புடையதாக சுற்றுநிருப ஆலோசனைகள் பிரகாரம் எரிபொருள் செலவழிவு தொடர்பான பரிசோதனை மேற்கொண்டு அதன்படி நாளாந்த ஓட்டக் குறிப்புகளை சமப்படுத்தல் வேண்டும். |
| (ஊ) 2019 ஒக்டோபர் 19 ஆந் திகதிய4/2016(ை) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1பந்தி | முனைப்பான பணிப்பாளர் பொருட்டு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களுக்கு ஆகக் கூடிய மாதாந்த வாடகையாக ரூபா.135,000இற்கு மட்டுப்படுத்த வேண்டுமாயினும்,பணியகத்தின் முனைப்பான பணிப்பாளரிடம் வழங்கியிருந்த வாகனத்தின் | முனைப்பான பணிப்-பாளரிடம் இணைக்க-ப்பட்டிருந்த ஜிப் வண்டிக்காக கொடுப்-பனவு நடவடிக்கை-களை மேற்கொள்வ-தற்காக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் பணிப்பாளர் சபையிடம் அனுமதி வழங்கப்ப ட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

மாதாந்த வாடகை ரூபா.158,400 ஆயினும். அதன்படி 12 மாதங்களுக்காக மொத்தம் ரூபா. 208,800ஐ மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டுக்காக பணியகத்தினதும் குழுவினதும் நிதிசார் விளைபயன் ரூபா. 1,046,634,438ம் மற்றும் ரூபா. 1,049,650,220 ஆன இலாபம் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் இலாபம் ஒழுங்குமுறையில் ரூபா.1,532,003,056ம் மற்றும் ரூபா. 1,525,354,276 ம் ஆகும். அதன்படி குழுவினதுமற்றும் பணியகத்தின் நிதிசார் விளைபயன் ஒழுங்குமுறையில் ரூபா .485,368,618ம் மற்றும் ரூபா. 475,704,056 அன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செல்நெறிகளின் ஆய்வு

முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பணியகத்தின் வருமானம் 10மூ ஆல் குறைவடைவதற்கு ஆட்சேர்ப்பு கட்டணங்கள் ரூபா. 133,210,208ஆல் குறைவடைந்திருத்தல் பிரதான காரணமாகியது. அதேபோன்று முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு தூதரகங்களின் வருமானம் ரூபா. 91,265,304ஆல் குறைவடைந்திருந்ததுடன், செலவினம் ரூபா. 223,261,020 ஆல் அதிகரித்திருந்தது. அதற்காக பணியாற்தொகுதியினரின் செலவினம் ரூபா.166,883,001 ம், பிரச்சார செலவினம் ரூபா.4,183,444 ம், வியாபார ஊக்குவிப்பு செலவினம் ரூபா. 23,100,873 ம், தொழில்பாட்டு செலவினம் 9,454,002 ம் அதிகரித்தல் பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டில் பெறுமதி ரூபா.3,611,950,163 ஆன முதிர்வடைந்த 06 திறைசேரி முறிகளை அன்றைய திகதியில் மீண்டும் முதலீடு செய்யாமை காரணமாக பணியக-த்திற்கு ரூபா.5,466,192ஆன வருமானம் கிடைக்கப்பெறவில்லை. | தலைவர் அவர்களின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு கவனித்தில் கொள்ள வேண்டிய அளவிலான காலம் எடுத்துக் கொண்ட படியால், சம்பந்தப்பட்ட முதலீடுகளை மேற்கொள்ளுதல் உரிய திகதியில் நடைபெறவில்லை. அதன்படி கணக்காய்வு ஐயப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் செவ்வையாகும். | கிடைக்காது போன வருமானத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்களை அடையாளம் காணப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரசாங்கம் மற்றும் தென் கொரியா அரசாங்கம் என்பவற்று-க்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை பிரகாரம் கொரியாவிடம் தொழில்களின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்ட தொழிற் படையினருக்கு விமான அனுமதிச் சீட்டுகளை ஒதுக்கி கொள்வதற்கு, அமைச்சரவை அனுமதிக்கமைவாக பணியகத்தால் செயற்படுத்திய விமான டிக்கெட் பிரிவு மூலம் 2011-2018 வரையிலான காலப் பகுதிக்குள் மொத்தம் ரூபா.13,369,380 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அந்த அலகின் அலுவலர் ஒருவர் மேற்கொண்ட நிதி மோசடி காரணமாக அவரை பணி தடை செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த அலகினை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள-எப்பட்டிருந்தது. ஆயினும், பணி தடைக்கு உள்ளாகிய அலுவலர்-களுக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்-கொள்ளாது அவரால் சமர்ப்பி-க்கப்பட்ட மேன்முறையீட்டை கவனத்தில் கொண்டு 2020 யூலை 16 ஆந் திகதி மீண்டும் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | இதற்கு ஏற்புடையதான உள்ளக கணக்காய்வு பரிசோதனை முடிவுறுத்தப்பட்டு 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் 06 ஆந் திகதி அறிக்கை அனுப்பி வைத்த பின்னர்,2020 பெப்ருவரி 26 ஆந் திகதியில் வழங்கிய ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு 2020 யூலை 10 ஆந் திகதியில் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2020 ஆகஸ்ட் 02 ஆந் திகதியில் என்னால் வழங்கிய ஆலோ-சனைகள் பிரகாரம் குற்றஞ்-சாட்டப்பட்ட அலுவலரிடம் குற்றப் பத்திரிக்கை வழங்கிய பின்னர் ஏனைய அலுவலர்க-ளிடமிருந்து விளக்கமளிப்புக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இந்த நிகழ்வுக்கு ஏற்புடையதாக முறை-யான விசாரணை நடாத்தி பொறுப்பு கூற வேண்டிய அலுவலர்கள் தொடர்-பில் தேவையான ஒழுக்காற்று நடவடி-க்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன்,கொரியாவிற்கு புலம்-பெயர்ந்தவர்களுக்கு நியாயமான விலை-யில் டிகெட்டுகளை கொள்வனவு செய்வ-தற்கு வெளிப்படைத் தன்மையுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

### 3.3 கருத்து வேறுபாடுகளுக்கு காரணமாகிய கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆண்டில் பணியகத்தின் பணியாற்தொகுதியினறுக்கு சீருடைகளின பொருட்டு ஒரு மேற்சட்டைக்கு ரூபா. 2,675 படியும் சேலை ஒன்று ரூபா. 5,425 படியும் பெற்றுக்கொள்வதற்காக ரூபா. 29,252,225 ஆன வழங்கல் தொடர்பான ஒப்பந்த உடன்-படிக்கைகளை மேற்கொள்ளப்-பட்டிருந்தது. | | |
| i. அதன்போது பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.2.1, 4.2.2 மற்றும் 4.2.3 பந்திகளுக்-கமைவாக நடவடிக்கை மேற்- | பணியகத்தின்அலுவலர்க-ளுக்குஇந்த நடவடிக்கை தொடர்பாக 25 ஆண்டுக-ளிலான அனுபவம் உள்ளபடி-யால்2019 ஆம் ஆண்டில் அது | பணியகத்தால் வருடாந்தம் வழங்கியுள்ள சீருடைகள் தொடர்பான முறைப்பா-டுகள் தொடர்ச்சியாக நிலவுதலும், அது தொடர்-பாக |

| | | |
|---|---|---|
| கொள்ளவில்லை என்பதுடன், பெறுகை வழிகாட்டல் கோவையின் கைந்நூல் 2.8.4 பந்திக்கு முரனாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் விடயம் தொடர்பான நிபுணத்தவர் ஒருவரை நியமனம் செய்திருக்கவில்லை. | தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. | கணக்காய்வு உசாவு-தல் மூலம் தகவல்கள் சமர்ப்பித்திருப்பினும், முகாமைத்துவத்தால் அது தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii)அதேபோன்று பெறுகை வழிகாட்டல் கோவையில் 5.6 பந்திக்கு முரணாக ஒரு வழங்குநரை இலக்காகக் கொண்டு சேலைகளின் விவரக் குறிப்பீடுகளாக வடிவமைப்பு வரை காட்டப்பட்டிருந்ததுடன், ஏனைய மேற்சட்டை (ளூாசைவ) மற்றும் நீற் காட்சட்டை (வசழரளநசள) ஆகியவற்றுக்கு தேவைப்படும் துணிகளுக்கான விவசரக் குறிப்-புகள் தயாரிக்கப்படவில்லை. | பணியகத்தின் தலைவரால் எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளாது சேலைக-ளுக்கான வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப விவரக் குறிப்புகளை உரியவாறு தயார் செய்யாமை தொட-ர்பாக பெறுகை சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பன கவனம் செலுத்தாமை யால் பெறுகை செயற்பாடு வெளிப்படைத் தன்மை-யுடன் நடைமுறைப்ப-டுத்தாமை தொடர்பாக விசாரணை நடாத்தல் வேண்டும் |
| (iii)விலை கணக்குகள் திறக்கப்-படுதல் பெறுகை வழிகாட்டல் கோவையில் 6.3.6 பிரகாரம் மேற்கொள்ளப்படவில்லை. பெறுகை வழிகாட்டல் கைந்-நூலில் 7.9.2 இன் படி ஏற்றுக்-கொள்ளப்பட்ட விலை கணக்-குகளை மதிப்பிடும் கோட்பாடு-களுக்கமைவாக விலை கணக்-குகளை மதிப்பிடப்படவில்லை என்பதுடன்,சேலைகளின் பொருட்டுஆகக் குறைந்த விலை கணக்குகளை சமர்ப்பித்திருந்த விலை மனுவை எந்தவொரு காணரங்களையும் காட்டாது நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலை மனுவினை பரிந்துரைக்க-ப்பட்டிருந்தது. அதன்படி ஆகக் குறைந்த விலை மற்றும் பரிந்து-ரைக்கப்பட்ட விலை என்பவ-ற்றுக்கிடையில் ரூபா. 11,912,150 ஆன வேறுபாடு அவதானிக்-கப்பட்டது. | வழங்கிய மாதிரிகளை விஞ்ஞான ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்காக, சேலை தொகையினை பெற்றுக்-கொண்டதன் பின்னர் முன்வை-க்கப்பட்டுள்ளது. அறிக்கை கிடைக்கப்பெறுகையில் அலுவ-லர்களிடம் சேலைகளை பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இந்த வழங்குநரிடத்தில் இதுவரை கொடுப்பனவுகளை மேற்கொள்ளாதபடியால் வழங்-குநருடன் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளலாம். | தவறான முறைமைகளை பின்பற்றியுள்ளதாக பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளதால், இது தொடர்பாக முறை-யான விசாரணை நடாத்தி, நியாயமான விலைக்கு சீருடைகளை கொள்வனவு செய்யாமையால் பணியக-த்திற்கு ஏற்பட்டுள்ள நட்ட-த்தை சீராக்கி கொள்-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iv)சீருடை சேலைகளின் பொருட்டு அதாவது பருத்தி என்றால் 60மூ ம் சில்க் என்றால் 40மூ ம் என்ற வகையில் அமைதல் வேண்டுமென காட்டப்பட்டிருப்பினும், மேற்சட்டை- | வழங்குதல்களை கையளிக்-கையில் மாதிரிக்கு ஏற்புடை-யதாக பொருத்தமின்மை உள்ளதாக கிடைக்கப்பெற்றி-ருந்த 08 முறைப்பாடுகளுக்கு | உரிய தரத்திற்கு அமையாத சீருடைகளை வழங்கியதால் மொத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டி இருந்த போதும், அலுவலர்களால் மீண்டும் |

| | | |
|---|---|---|
| களுக்கு (ளூாசைவ) ஏற்புடையதாக அவ்வாறான விவரக் குறியீடு காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.அரச ாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடத்தால் மேற்கொண்ட மாதிரி பரிசோதனையில் 52மூ பருத்தி, 42மூ பொலியஸ்டர் அடங்கியுள்ளதாகவும், ஆண்களின் சீருடை 100மூ பொலியெஸ்டர் நூலில் முடிவுருத்திருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டது. | ஏற்புடையதாக, சீருடைகளை மீண்டும் வழங்குநரிடத்தில் வழங்கப்பட்டு அதன் பொருட்டு வேறு மேற்சட்டை (ளாசைவ) பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அலுவலர்களிடம் வழங்கியிருந்த உரிய தரத்தில் இல்லாத சீருடைகளை அந்த அலுவலர்களாலயே வழங்குநரிடத்தில் கையளிக்கப்பட்டு மாற்றப்பட்டுள்ளது. | வழங்கிய சீருடை-களை மட்டும் மாற்று-வதற்கு வாய்ப்பு வழங்-குதல், சரியான செயற்பாடு அல்ல என்பதை முகாமை த்துவம் கவனம் செலுத்த வேண்டிய விடயமாகும். |
| (ஆ) இலங்கை தூதரக செயற்றிட்ட கைந்நூலை இற்றைப்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில்நடாத்தப்பட்ட செயலமர்வில் பங்குபற்ற வேண்டுமென சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் பெயரிடப்பட்டிருந்த அலுவலர்களுக்கு மேலதிகமாக தகுதிகாண் காலத்திலிருந்த அலுவலர் அடங்கலாக 4 அலுவலர்களை ஒழுங்கான முறைமையின்றி தெரிவு செய்து பங்குபற்றச் செய்விக்கப்பட்டிருந்தது. அதற்காக தாபன விதிக் கோவையின் ஒஏஅத்தியாயத்தில் 10.1 மற்றும் 10.4 பிரிவுகளுக்கு முரணாக ரூபா. 1,931,139 ஐ செலவிடப்பட்டிருந்தது. | அலுவலர்களை தெரிவு செய்தல், கடமைகளின் தேவை மற்றும் அலுவலர்களின் ஆற்றல்களை அடிப்படையாகக்கொண்டு தலைவரின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுகிறது. வெளிநாடு செல்வதற்கு ஏற்புடையதாக விடய பொறுப்பு அமைச்சர் அவர்களின் அனுமதி அமைச்சினால் வழங்கப்படும். அந்த அனுமதி உள்ளடங்கிய கடிதங்கள் பணியகத்திடம் கிடைக்கப் பெறுவதில்லை என்பதுடன், அமைச்சின் அனுமதி மட்டும் பணியகத்திடம் கிடைக்கப் பெற்றுள்ளது. | கணக்காய்வு திகதியான 2021 மார்ச் மாதமாகும் போதும், கைந்நூல் தயாரிக்கப்படாமை காரணமாக அவசர தேவையாக கருதிபணியாற்தொகுதியை ஈடுபடுத்தியதன் மூலம் எதிர் பார்க்கப்பட்ட நோக்-கம் நிறைவேற்றப்பட-வில்லை என்று அவதானி-க்கப்பட்டது. முறையான அனுமதிக்கமைவாகவும் தாபன விதிக் கொவையின் ஏற்பாடுகளின் படியும் அலுவலர்களை பங்குபற்-றச் செய்விப்பதற்கும், அதில் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற-றிக் கொள்வதற்கும் முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

## 3.4 பயனற்ற அல்லது குறை பயன்பாட்டு சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்தின் பயிற்சி நிலையங்களுக்கு வழங்குவதற்காக 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா.4,055,663பெறும-தியான 22 மிதி வண்டிகளை சம்பந்தப்பட்ட கடமை நடவடிக்-கைகளின் பொருட்டு பயன்படு-த்தாது, பயனற்று அல்லது குறை பயன்பாட்டுடன் நிலவியதாக கணக்காய்வு பரிசோதனைகளின் போது அறிய வந்திருந்தது. | இந்த மிதி வண்டிகள் ஆகக் கூடிய மட்டத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | மிதி வண்டிகளை கொள்வனவு செய்யும் நோக்கம் நிறைவேறும் வகையில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறையும் மற்றும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2003 யூன்02ஆந் திகதிய பிஈடி /12 ஆம் இலக்க அரச தொழில் முயற்சி சுற்றுநிருபத்தின் 6.5.1 பிரிவு மற்றும் 2004 பெப்ருவரி 24ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை.நிதிக் கூற்றுகளை கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகள் சமர்ப்பித்தல் 2020 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்தது. | கணினிமயப்படுத்திய கணக்கீட்டு முறைமை-யில் நிலவிய குறைப்-பாடுகள் காரணமாக கணக்குகளை சமர்ப்பித்தல் தாமதமடைந்திருந்தது. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுகளை உரியவாறு சமர்ப்பிக்கப்-படுதலின் மீது முகாமை-த்துவம் கவனம் செலுத்-தல் வேண்டும். |